## அய்ந்தாம் ஆண்டில் 'திராவிட மாடல்' ஆட்சி! ஒவ்வொரு நாளும்

# சாதனைச் சரித்திர முத்திரை பதித்து வருகிறார், சரித்திர நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மே 7-

நான்காண்டுகள் நிறைவடைந்து அய்ந்தாம் ஆண்டில் 'திராவிட மாடல்' ஆட்சி! ஒவ்வொரு நாளும் சாதனை சரித்திர முத்திரை பதித்து வருகிறார் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்! அரசமைப்புச் சட்ட அதிகாரப் பங்களிப்புப்படி பல்கலைக் கழகங்களைத்தொடங்குவது - தேர்வுகளை நடத்துவது மாநில அரசுகளுக்கு மட்டுமே உள்ள தனி உரிமை! ஒன்றிய அரசுக்கு அவ்வுரிமை கிடையாது - இதன்படி 'நீட்' தேர்வு அரசமைப்புச் சட்ட விரோத நடவடிக்கை என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

**4 ஆண்டுகள் நிறைவடைந்து 5-ஆம் ஆண்டில் 'திராவிட மாடல்' ஆட்சி!**

'திராவிட மாடல்' ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து இன்றோடு (6.5.2025) நான்காண்டுகள் நிறைவடைந்து, 5-ஆம் ஆண்டு ஆட்சி தொடருகிறது!

இந்தியாவின் ஒப்பற்ற முதலமைச்சரான நமது 'சமூகநீதிக்கான சரித்திர நாயகர்' முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களது திராவிட ஆட்சி, எடுத்துக்காட்டான 'திராவிட மாடல்' ஆட்சியாகும்.

**ஒவ்வொரு நாளும் சாதனை! சாதனை!! சாதனை!!**

நீதிக்கட்சி முதலமைச்சர் பனகால் அரசர் தொடங்கி, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய முதலமைச்சர்கள் ஏற்படுத்திய திராவிடக் கட்டுமானத்தின் மீது பன்மடங்கு விரிவாக்கத்துடன் உள்ள மீட்சிக்கான ஆட்சியில் ஒவ்வொரு நாளும் சாதனை! சாதனை!! சாதனை!! என்றே நகர்ந்துள்ளது என்பது கொள்கை எதிரிகளையும் திகைக்க வைக்கும் - அவர்களைத் திணறடிக்கும் சாதனைக் குவியல் ஆகும்!

எல்லாத் துறைகளும் எழுச்சி பெற்று தத்தம் பங்களிப்பை, பற்பல மாவட்டங்களிலும் திறம்பட செய்து வருகின்றன.

குறிப்பாக, மருத்துவமும், கல்வியும், உயர்கல்வி, தொழிற்கல்வி உள்பட வேகமான வியக்கத்தக்க வேக நடைபோட்டு அகிலத்தின் பார்வைக்கும், பாராட்டுக்கும் உரியதாகி வருகிறது. மக்களது அறிவை விரிவு செய்ய, புதிய பல்கலைக் கழகங்கள் பூத்துக் குலுங்கத் தொடங்கியுள்ளன, தமிழ்நாட்டில்!

**எதிரிகள் மருண்டோடும் மகத்தான சரித்திர சாதனை ஆட்சியாக...**

முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றத்தில் ஆற்றிய பேருரையில் குறிப்பிட்டதுபோல, அவரது வெற்றிப் பயணத்தை நடத்தவிடாது தடுக்க, "பாம்புகளும், நரிகளும், அகழிகளும், தடுப்புச் சுவர்களும்" இருந்தாலும், அவற்றைத் தடுத்தாளும், அவர் ஆட்சியின் தடந்தோள்கள் தடைக்கற்களைச் சுக்கல் சுக்கலாக்கி, உடைத்து வீசி, சமூகநீதி, அறிவியல், பகுத்தறிவு, சுயமரியாதைப் பாதையில் தடைபடா வேகநடையோடு, எதிரிகள் மருண்டோடும் மகத்தான சரித்திர சாதனை ஆட்சியாக கடந்த 4 ஆண்டுகள் ஓடின!

இடையில் ஒன்றிய அரசின் தொடர் ஒத்துழையாமை; மாநில அமைச்சர்கள் அருகில் இருந்தும் அவர்களுக்கு உரிய மரியாதைகூட தராது "அழுகிறார்கள்; நன்றாக அழுங்கள்" என்று ஒரு தரமற்ற பேச்சை (இராமேசுவரத்தில்) பேசி, தான் வகிக்கும் பிரதமர் பதவியின் மாண்பையும் சீர்குலைத்துவிட்டு, "கூட்டுறவுக் கூட்டாட்சி" (Cooperative Federation) என்ற பொய்ப் பாட்டை பாடி வரும் நிலை.

ஆளுநர் என்ற பெயரால் அடாவடித்தனத்தால் அப்பதவியின் விழுமியத்தை விரட்டியத்த ஓர் ஆளுநர்.

தமிழ்நாட்டு நலன், உரிமைகளை அடகு வைத்த அடிமைகளைமிரட்டி, கூட்டணிகளை, கொள்கையற்ற தன்மையில் கூட்டி மிரட்டிப் பார்ப்பது.

**நாளும் சரித்திர முத்திரை பதித்து வருகிறார்!**

இத்தகைய அரசியலை அன்றாடம் எதிர்கொண்டு, அவற்றை அலட்சியப்படுத்திவிட்டு, தனது லட்சிய வெற்றிப் பயணத்தை - பேச்சால் அல்ல - செயல்திறனால் நாளும் சரித்திர முத்திரை பதித்து வருகிறார் நமது சரித்திர நாயகரான 'திராவிட மாடல்' முதலமைச்சர்!

குடந்தையில் "கலைஞர் (நூற்றாண்டு) பல்கலைக் கழகம்" உருவாக்கி வருகிறார்! இவ்வுரிமை - பல்கலைக் கழகங்களைத் தொடங்குவது - தேர்வுகளை நடத்துவது, இந்திய அரசமைப்புச் சட்டம் 7-ஆவது அட்டவணைப் பட்டியல்படி, மாநில அரசுகளுக்கு மட்டுமே உள்ள தனி உரிமையாகும்.

ஒன்றிய அரசுக்குரிய ஒன்றிய அரசு பட்டியலில், அவ்வுரிமை ஒன்றிய அரசுக்குக் கிடையாது என்பதே அரசமைப்புச் சட்டப்படி உள்ள நிலை!

பலர் அறியாதவர்களாக உள்ளதால், "ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டோன் புலி வேஷம் போட்டு பொய் ஆட்டம் ஆடுகின்றான்" என்று புரட்சிக்கவிஞர் பாடியது போல் நிலை இப்போது!

அரசமைப்புச் சட்ட அதிகாரப் பங்களிப்புப்படி மாநிலங்களுக்கே அதிகாரம்!

**ஆதாரங்கள் இதோ:**

அரசமைப்புச் சட்டம் கூறு Article 246-இன் கீழ் உள்ள 7-ஆவது அட்டவணைப்படி அதிகாரப் பங்களிப்புப்படி, (Union List - ஒன்றியப்பட்டியலில்)

44 எண் வரிசைப்படி

*"Incorporation, regulation and winding up of corporations, whether trading or not, with objects not confined to one State, but not including universities."*

இதே பட்டியலில் 7 ஆவது அட்டவணையில் மாநிலப் பட்டியலில் (State List)

32 எண் வரிசையில் உள்ளதுபடி,

*"Incorporation, regulation and winding up of corporations, other than those specified in List I, and universities; unincorporated trading, literary, scientific, religious and other societies and associations; cooperative societies."*

இவ்விரண்டு பட்டியல்களிலும் உள்ள முக்கிய சட்ட உரிமை, பல்கலைக் கழகங்களைத் தொடங்குவது, நடத்துவது, தேர்வு வைப்பது, பட்டமளித்தல் இவையெல்லாம் மாநில உரிமைகளே!

(இதன்படி, 'நீட்' தேர்வு அரசமைப்புச் சட்ட விரோத நடவடிக்கை)

துணிவும், தெளிவும் உள்ள உச்சநீதிமன்ற நீதிபதிகள், விருப்பு - வெறுப்பின்றி சட்டப்படி ஆய்வு செய்துள்ளனர்.

தேர்வு நடத்தும் உரிமை, மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு மட்டுமே உள்ள அதிகாரம். ஒன்றிய அரசின் நடவடிக்கை- அரசமைப்புச் சட்ட துஷ்பிரயோகம்!

'ஒரே தேர்வு இந்தியா முழுவதும்' என்பது அரசமைப்புச் சட்டப் பிரிவுப்படி முற்றிலும் தங்களுக்கு இல்லாத அதிகாரத்தை - பல்கலைக் கழகங்களின் உரிமைகளைப் பறித்து வைத்து, இத்தனை ஆண்டுகளாக நடத்தும் அரசமைப்புச் சட்ட துஷ்பிரயோகம் ஆகும். 'விடியல் ஒரு நாள் ஏற்படுவது உறுதி!'

பல்கலைக்கழக வரலாற்றில் நமது கலைஞர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம். குடந்தை யில் முகிழ்க்கும் பல்கலைக்கழகத்திற்கு அவர் பெயர் வைத்திருப்பது முற்றிலும் பொருத்தமானதாகும் - காலத்தின் கட்டாயமுமாகும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.



குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில், நேற்று (06.05.2025) சென்னை கிண்டியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அறிவிப்புகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வு கூட்டத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல் ஆனந்த், ,டான்சி தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், சிட்கோ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் .கார்த்திக், தொழில் வணிக ஆணையர் நிர்மல்ராஜ், EDII இயக்குநர் அம்பலவாணன், மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இராணிப்பேட்டை மாவட்டம்

# காவேரிப்பாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் ஆர்.காந்தி – ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு !

இராணிப்பேட்டை, மே 7 -

இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் அரசின் சாதனை விளக்க மாபெரும் திமுக பொதுக்கூட்டம் ஓச்சேரி சந்தை மைதானத்தில் நாளை (வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு நடக்கிறது. கூட்டத்துக்கு காவேரிப்பாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ஓச்சேரி எம்.பாலாஜி தலைமை தாங்குகிறார் . ஒன்றிய அவை தலைவர் எம்.ஆர்.லட்சாதிபதி அனைவரையும் வரவேற்று பேசுகிறார் .பூரி என்ற அன்பரசு கே.பரமேஸ்வரி, ஒன்றிய பொருளாளர் கார்த்திகேயன் மாவட்ட பிரதி நிதிஎன். சக்தி ஜே ஜாகீர்உசேன் பன்னீர்செல்வம் பி.சரவணன் வெங்கடேசன், எம் .கோவிந்தன் திருவேங்கட சரவணன் எஸ்.சதீஷ் , கே.ஹரிதாஸ் சுமதி அசோக், எஸ். செல்வராஜ் ஜெய்பால், சாந்திவேலு, சாரதாகணேஷ் கே. பழனி , நசீர்பாய் வெங்கடேசன் , கமலக்கண்ணன் ஏழுமலை, தேவராஜ், செல்வராஜ் , வழக்கறிஞர் சித்ரா, வி.சுதாகர் பூவரசன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் கவிஞர் நன்மாறன் மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் ஆர் .வினோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. எல் ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே .சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.சிவானந்தம், துரைமஸ்தான், குமுதா குமார், மாவட்ட பொருளாளர் ஏ.வி.சாரதி, தலைமை செயற்குழு உறுப்பினர் அ. அசோகன், சி. மாணிக்கம் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் கே சிட்டிபாபு ,மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் கே .பி. வெங்கடேசன் மாவட்ட மாணவர்அணி அமைப்பாளர் எஸ்.வினோத், தெய்வசிகாமணி பேரூர் செயலாளர் பாஸ் என்ற நரசிம்மன், ஒன்றிய பெருந்தலைவர் கே. அனிதா குப்புசாமி ,பேரூர் தலைவர் எஸ்.என். லதா நரசிம்மன் ,தீபிகா முருகன், வி எஸ். முரளி , காண்டீபன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசுகிறார்கள்.

முடிவில் மாவட்ட பிரதி நிதி ஆர்.பன்னீர் செல்வம் நன்றி கூறுகிறார்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் எழும்பூர் தொகுதியில் இரண்டாம் நாள் நிகழ்வாக 61வது வட்டம், எழும்பூர் ரயில் நிலையம் அருகில்; 61 'அ' வட்டம், பாந்தியன் சாலை, ஆதித்தனார் சிலை அருகில்; 78ஆவது வட்டம், சூளை, பெரம்பூர் பேரக்ஸ் சாலைஅஷ்டபுஜம் சாலை சந்திப்பு மற்றும் 78 'அ' வட்டம், சூளை நெடுஞ்சாலை, சூளை பழைய அஞ்சல் நிலையம் அருகில் ஆகிய நான்கு இடங்களில் நீர் மோர் பந்தல்களைத் திறந்துவைத்தார்.


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் : 27-05-1966
மறைவு : 06-05-2025

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்
காட்டாங்கொளத்தூர் ஒன்றிய தி.மு.க.
முன்னாள் துணைப் பெருந்தலைவர்
**நினைவில் வாழும்**
**ம.க.பலராமன்** அவர்களின் மகளும்
**ராயப்பேட்டை ம.சந்திரசேகர்**
அவர்களின் மனைவியுமான

திருமதி
# ச.மகேஸ்வரி
வயது – 59



அவர்கள் 06-05-2025 செவ்வாய்க்கிழமையன்று இயற்கை எய்தினார். அம்மையாரின் இறுதி ஊர்வலம் 07-05-2025 புதன்கிழமை இன்று பிற்பகல் 3.00 மணியளவில் மண்ணிவாக்கம், கனிமொழி அரவிந்தன் நகரில் அமைந்துள்ள அவர்களது இல்லத்திலிருந்து புறப்படும் என்பதனை ஆழ்ந்த வருத்தங்களுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நினைவுகளுடன்
கணவர் : ராயப்பேட்டை ம.சந்திரசேகர்
மகன்கள் : ச.கௌதம் ச.கார்த்திக்
**மற்றும் குடும்பத்தினர்கள் – கழக உடன்பிறப்புக்கள்**
**மண்ணிவாக்கம் ஊராட்சி தி.மு.க**

JAGAN ADS - 9962969675